பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

31 03 2025 **MONDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வதில் அணுமின் சக்தி முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. மருத்துவ படிப்புக்கான இடங்கள் மூன்று மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. தொழில்துறையின் வளர்ச்சிக்கு தமிழக அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக மாநில அமைச்சர் திரு ராஜேந்திரன் கூறியுள்ளார்.

4. விசைத்தறி தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற திமுக அரசு முன்வர வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

5. ஆசிய கோப்பை ஹாக்கிப்போட்டி பீகாரின் Rajgir –ல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

----இனி விரிவான செய்திகள் --

<<<<<<>>>>>

நாட்டின் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வதில் அணுமின் சக்தி முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், அணுமின் உற்பத்தி தொடர்பாக மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் எழுதியுள்ள கட்டுரையை பகிர்ந்துள்ளார்.

எரிசக்தித்துறையில் தற்சார்பினை எட்டுவதிலும், அணுமின் திட்டங்கள் முக்கிய பங்கு வகிக்கும் என்றும் திரு நரேந்திர மோடி அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

மருத்துவ கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

ஹரியானா மாநிலம் ஹிசாரில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பொது சுகாதார மையங்களை ஏற்படுத்துவதற்காக 64 ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்பட்டிருப்பதாக கூறினார்.

எயிம்ஸ் மருத்துவமனைகளின் எண்ணிக்கை தற்போது 23-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மருத்துவ படிப்புகளுக்கான இடங்களும் மூன்று மடங்கு அதிகரிக்கப்படடுள்ளதாக அவர் குறிப்பிட்டார்

அடுத்த ஐந்தாண்டுகளில் புதிதாக 85 ஆயிரம் மருத்துவ படிப்புகளுக்கான இடங்கள் ஏற்படுத்தப்படும் என்றும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<>>>>>

புற்றுநோய் பாதிப்பு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், புற்றுநோய் பாதிப்புகளை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் நோக்கில் பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ், மார்பக புற்றுநோயை கண்டறிவதற்கான பரிசோதனைகள் 15 கோடிக்கும் மேற்பட்டோருக்கு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் கூறினார்.

<<<<<<>>>>>

விஷ்வகர்மா திட்டத்தின்கீழ் பயன்பெற 27 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இந்த திட்டத்தின்கீழ கைவினைக்கலைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படுவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதுவரை 12 லட்சத்திற்கும் மேற்பட்ட பயனாளிகள் பயிற்சியை நிறைவு செய்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு ஆயிரத்து 190 கோடி ரூபாய் அளவிற்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

தொழில்துறையின் வளர்ச்சிக்காக தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக மாநில அமைச்சர் திரு ராஜேந்திரன் கூறியுள்ளார்.

இன்று சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - ராஜேந்திரன் - 45 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

விசைத்தறி தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற திமுக அரசு முன்வர வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கூலி உயர்வு கோரி கோவை, திருப்பூர் மாவட்டங்களில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட விசைத்தறி தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்பிரச்சினையில் தமிழக அரசு தலையிட்டு விசைத்தறி உரிமையாளர்கள் மற்றும் ஜவுளித்துறைக்கு இடையே பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்து அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு அண்ணாமலை கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>

தமிழக அரசால் பறிமுதல் செய்யப்பட்ட ஆற்று மணலை ஒப்பந்ததாரர் மூலம் விற்பனை செய்யக்கூடாது என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், காஞ்சிபுரம் மாவட்டம் பழைய சீவரம், கள்ளபிரான் புரம் ஆகிய பகுதிகளில் இயங்கி வந்த மணல் குவாரிகள் முறைகேடு புகார் காரணமாக 12 ஆண்டுகளுக்கு முன்னர் மூடப்பட்டதாக கூறினார்.

அப்போது பறிமுதல் செய்யப்பட்ட மணலை தமிழக அரசு தற்போது விற்பனை செய்ய முடிவு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த மணலை தனியார் ஒப்பந்ததாரர் மூலம் விற்பனை செய்யும் திட்டத்தை கைவிட்டுவிட்டு இணையதளம் வாயிலாக ஏல நடவடிக்கைகள் மூலம் மணல் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு ராமதாசு கோரியுள்ளார்.

<<<<<<>>>>>

புனித ரமலான் பண்டிகை வழக்கமான உற்சாகத்துடன் இன்று கொண்டாடப்பட்டது.

இதனையொட்டி, மத நல்லிணக்கத்தை போற்றும் வகையில், கோவையில் உள்ள கோட்டை ஈஸ்வரன் கோவிலுக்கு சென்று அங்குள்ள கோவில் நிர்வாகிகளுக்கு இஸ்லாமியர்கள் இனிப்புகளை வழங்கி மகிழ்ச்சியடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - ஹரிஹரன் - 45 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

தமிழர்களின் மரபு கலையான பறை இசைக்கு பத்மஸ்ரீ விருது கிடைத்திருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு வேலு ஆசான் கூறியுள்ளார்.

விருதுநகரில் எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - வேலு ஆசான் - 50 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

பாஸ்போர்ட் தொடர்பான சந்தேகங்களை களையும் வகையில் சென்னை மண்டல பாஸ்போர்ட் அலுவலர் திரு விஜயகுமாருடன், எமது செய்திப்பிரிவு உதவி இயக்குனர் ஜாய் பங்கேற்ற நேர்முகம், நாளை காலை மணி 8.45-க்கு ஒருங்கிணைந்த அலைவரிசையில் ஒலிபரப்பாகும்.

மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை மலர் சந்தையில் பூக்களின் விலை மூன்று மடங்கு உயர்ந்துள்ளது.

----------------

ராமேஸ்வரம் அருகே சட்டவிரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 80 லட்சம் ரூபாய் மதிப்பிலான கடல் அட்டைகளை கடலோர பாதுகாப்புப்படையினர் பறிமுதல் செய்தனர்.

-------------------

நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசனை முன்னிட்டு, தாவரவியல் பூங்கா உள்ளிட்ட ஏழு முக்கிய சுற்றுலா தளங்களில் சினிமா படப்பிடிப்பு நடத்த நாளை தொடங்கி, மூன்று மாதங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

------------------

திருவாரூர் மாவட்டம் வேம்பனூர் கிராமத்தில் உள்ள பழமைவாய்ந்த லஷ்மி நாராயணன் பெருமாள் கோவில் கும்பாபிஷேகம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய கோப்பை ஹாக்கிப்போட்டி பீகாரின் Rajgir —ல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி, ஆகஸ்ட் மாதம் 29-ஆம் தேதி தொடங்கி, செப்டம்பர் மாதம் 7-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

----------

டென்னிஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் யுகி பாம்ரி 26-ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<>>>>>